# ரத்தினம் கல்லூரி சார்பில் பேராசிரியர்களுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டி

Tamil Hindu,dt :14.7.2025,pg:no:4

■ கோவை

கோவை ரத்தினம் கலை அறிவியல் கல்லூரியில், மாநில அளவில் கல்லூரி பேராசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், கடந்த 5-ம் தேதி 6-வது ஆண்டாக நடத்தப்பட்டது. இதில், தமிழகத்தின் 15-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இருந்து 56 கல்லூரிகளைச் சேர்ந்த 628-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். கேரம், செஸ் போன்ற உள் அரங்க விளையாட்டுப் போட்டிகளும், கிரிக்கெட், வாலிபால், கூடைப்பந்து, பேட்மிட்டன் போன்ற வெளி அரங்க விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. ஆண்கள், பெண்கள் என தனித்தனியாக போட்டிகள் நடத்தப்பட்டன.

கோவை மாநகரைச் சேர்ந்த ஆப்பிள் ஹாலிடே அன்ட் கேட்ரர்ஸ், அக்ஸை கேட்டரிங், இக்லு ஹாலிடேஸ், தி பிரிஸிஷ் சென்ட், ரோட்டரி ஸ்பான்சர்ஷிப், காஸ்வான் சில்வர்ஸ் யுனிட் ஆஃப் காஸ்வான் எல்எல்பி, ஸ்டார் பில்டர்ஸ், ஸ்போர்ட்ஸ் அரினா, ஷாஸ் மென்ஸ் டிசைனர், சாவித்திரி போட்டோஸ், விவி பேஷன்ஸ் போன்ற அமைப்புகள் நிதியுதவி வழங்கி போட்டிகளை சிறப்பித்தன. ரத்தினம் கலை அறிவியல் கல்லூரி செயலாளர் மற்றும் முதன்மை நிர்வாகி ஆர்.மாணிக்கம், கல்லூரி முதல்வர் எஸ்.பாலசுப்பிரமணியன், துணை முதல்வர் எஸ்.என். சுரேஷ் வழிகாட்டுதல்படி போட்டிகள் நடைபெற்றன.

ரோட்டரி கிளப் தலைவர் பிரபு, செயலாளர் விமல் ஆகியோர் பங்கேற்று ஒட்டுமொத்த போட்டிகளிலும் பங்கேற்று, ஆடவர் பிரிவில் வெற்றி பெற்ற சிவகாசி மெப்கோ ஸ்க்லெங்க் பொறியியல் கல்லூரிக்கும், மகளிர் பிரிவில் வெற்றி பெற்ற அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத்துக்கும் ஒட்டுமொத்த சுழற்கோப்பையை வழங்கினர். கல்லூரியின் காட்சி தொடர்பியல் துறை தலைவர் சதீஷ் ஆனந்தன், ஆடை வடிவமைப்புத்துறை தலைவர் தான்வி உள்ளிட்டோர் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



ரத்தினம் கல்லூரி சார்பில் கல்லூரி பேராசிரியர்களுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் மகளிர் பிரிவில் வெற்றி பெற்று ஒட்டுமொத்த சுழற்கோப்பையை வென்ற அவிநாசிலிங்கம் பல்கலைக்கழக அணியினர்.